සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

තෙවන වාර පරීක්ෂණය 2020 | 11 ශ්‍රේණිය
மூன்றாம் தவணைப் பரீட்சை 2020 | தரம் 11
**Third Term Test - 2020** | **Grade 11**

භූගෝල විද්‍යාව II
புவியியல் II
Geography II

පැය 02
இரண்டு மணி நேரம்
*Two hours*

- **பகுதி I முதலாம் வினா கட்டாயமானது.**
- **பகுதி II ல் 4 வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**பகுதி I**

**01) (அ) உமக்கு வழங்கப்பட்டுள்ள 1:50 000 தேசப்படத்தை ஆதாரமாகக்கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**

- **1-5 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. இல 1ல் காட்டப்பட்டுள்ள பௌதிக அம்சம் யாது ?
   ( மியாந்தர் வளைவு, பின்னிய ஆறு, நீர்ப்பிரி நிலம் ) புள்ளி 01
2. இல 2ல் காட்டப்பட்டுள்ள நிர்வாக எல்லை யாது ?
   ( மாகாண எல்லை, மாவட்ட எல்லை , பிரதேச எல்லை ) புள்ளி 01
3. இல 3ல் காட்டப்பட்டுள்ள நதியை அண்மித்து காணப்படும் பௌதிக அம்சம் யாது ?
   ( மியாந்தர் வளைவு, கிளையாறு, சதுப்பு நிலம் ) புள்ளி 01
4. இல 4 ல் காட்டப்பட்டுள்ள பயிர்ச்செய்கை யாது ?
   ( வீட்டுத்தோட்டம், இறப்பர் தோட்டம், வேறு பயிர்கள் ) புள்ளி 01
5. இல 5 ல் காட்டப்பட்டுள்ள பாதை அமைப்பு யாது ?
   ( பிரதான பாதை, நடைபாதை, வண்டிப்பாதை ) புள்ளி 01
6. வழங்கப்பட்டுள்ள தேசப்படத்தில் காணப்படும் பிரதான பயிர்செய்கைகள் இரண்டைக் குறிப்பிடுக.
   புள்ளி 02
7. நதியின் மத்தியப்பகுதியில் இடைவிட்ட கோடுகளால் காட்டப்படும் நீர்வடிகாலமைப்பு யாது ?
   புள்ளி 01
8. தேசப்படத்தில் காட்டப்பட்டுள்ள பாதை கட்டமைப்பு பற்றி சுருக்கமாக விளக்குக.
   புள்ளி 02

**(ஆ ) உமக்கு வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. A, B, C எனும் எழுத்துக்களில் எவ்வெழுத்தினால் ஒகொட்ஸ் கடல் குறிக்கப்பட்டுள்ளது.
2. D, E, F எனும் எழுத்துக்களில் இரண்டாம் நிலைச்சனச்செறிவு கொண்ட பிரதேசமாக றியோடி ஜெனிரோ நகரத்தைக் குறிக்கும் எழுத்து எது ?

3. G, H, J எனும் எழுத்துக்களினால் காட்டப்படும் மலைத்தொடர்களில் டிரகன்ஸ்பேர்க் மலைத்தொடர் குறிக்கப்பட்டுள்ள எழுத்தாக அமைவது ?

4. K, L, M எனும் எழுத்துக்களினால் காட்டப்படும் சமவெளிகளில் மஞ்சூரியா சமவெளியைக் குறிக்கும் எழுத்து எது?

5. O, P, Q எனும் எழுத்துக்களினால் நெல் பயிரிடப்படும் பிரதேசங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் சக்ரமெண்டோ ஆற்றுப்பள்ளத்தாக்கைக் குறிக்கும் எழுத்து எது ?

**இ) உமக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தை நன்கு அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. A, B, C எனும் எழுத்துக்களில் இலங்கையில் இரத்தினக்கல் கிடைக்கக் கூடிய பிரதேசங்கள் காட்டப்பட்டுள்ளது. இதில் ஒக்கம்பிடிய எவ்வெழுத்தினால் குறிக்கப்பட்டுள்ளது .?

2. D, E, F எனும் எழுத்துக்களில் அதிகளவில் வெள்ளப் பெருக்கை எதிர்நோக்கும் நில்வளா கங்கையை குறிக்கும் எழுத்து எது ?


3. G, H, J எனும் எழுத்துக்களினால் காட்டப்படும் மாவட்டங்களில் சேனாநாயக்க சமுத்திரம் அமைந்துள்ள மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்தாக அமைவது எது?

4. K, L, M எனும் எழுத்துக்களினால் காட்டப்படும் மட்பாண்டக் கைத்தொழில் அமைந்துள்ள ஓட்டுசுட்டானைக் குறிக்கும் எழுத்து எது ?

5. O, P, Q எனும் எழுத்துக்களில் சூரிய சக்தி கூடம் குறிப்பிடப்பட்டுள்ளது.இதில் பருதகந்த சூரிய சக்தி கூடத்தை குறிக்கும் எழுத்து எது ?

## பகுதி II

(02)





1. உருவில் A, B எனும் எழுத்துக்களில் குறிப்பிடப்படுபவை எவையென ஒழுங்குமுறையில் எழுதுக. (2 புள்ளி)
2. A, C எனும் எழுத்துக்களில் குறிப்பிடப்பட்ட பகுதிகள் அமைந்துள்ள பாறைகளின் வகைகள் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளி)
3. கற்கோளத்தினால் மனிதனுக்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக. (2 புள்ளி)
4. கற்கோளத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தும் போது அவை பல்வேறு வழிகளில் பாதிப்புக்குள்ளாகின்றன.அவ்வாறு பாதிப்புக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் இரண்டை சுருக்கமாகக் குறிப்பிட்டு விளக்குக. (2 புள்ளி)

03. 1. இலங்கையில் அதிகளவில் பயன்படுத்தப்படும் சக்தி மூலங்கள் மூன்றைக் குறிப்பிடுக. ( 02 புள்ளி)

2. வலுச்சக்தி பயன்பாட்டின்போது ஏற்படும் பிரச்சினைகள் 3ஐ குறிப்பிட்டு ஒன்றை சுருக்கமாக விளக்குக. ( புள்ளி 05)

3. வலுச்சக்தி வளங்களைப் பாதுகாப்பதற்கு நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் 3 ஐ குறிப்பிடுக. ( புள்ளி 03)

04.




1. உருவில் A , B எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள உலகின் புவிநடுக்கம் ஏற்படும் பிரதான வலயங்கள் இரண்டையும் குறிப்பிடுக? (2 புள்ளி)

2. புவிநடுக்கம் ஏற்படும் விதத்தை சுருக்கமாக விளக்குக. (3 புள்ளி)

3. புவிநடுக்கத்தினால் ஏற்படும் விளைவுகள் மூன்றைக் குறிப்பிட்டு அதில் இரண்டை சுருக்கமாக விளக்குக. . (5 புள்ளி)

05. 1. இலங்கையில் காணப்படும் குடிசைக் கைத்தொழில்கள் நான்கு தருக. ? (2 புள்ளி)

2. இலங்கையில் குடிசைக் கைத்தொழில் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (3 புள்ளி)

3. இலங்கையில் குடிசைக் கைத்தொழிலினால் ஏற்படும் பிரச்சினைகள் மூன்றைக் குறிப்பிட்டு இரண்டை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

06. 1. உலகில் காணப்படும் காடுகளின் பிரதான வகைகள் மூன்றைக் குறிப்பிடுக. ( 3 புள்ளி )

2. மேலே குறிப்பிட்ட காடுகளின் வகைகளில் ஏதேனும் ஒன்றில் காணக்கூடிய பண்புகள் 02 தருக. ( 2 புள்ளி )

3. அயன மண்டல மழைக்காடுகள் அழிவடைவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் 02 தருக. ( 2 புள்ளி )

4. காடுகளும்,வன ஜீவராசிகளும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டைக் குறிப்பிட்டு ஒன்றை சுருக்கமாக விளக்குக. ( 3 புள்ளி )

07. 1. இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு சாதகமான பௌதிகக் காரணிகள் 02 தருக. ( 2 புள்ளி )

2. இலங்கையில் தேயிலை பயிரிடும் பிரதான மாவட்டங்கள் 03 தருக. ( 3 புள்ளி)

3. இலங்கையில் தேயிலைப்பயிர்ச்செய்கை விருத்தி செய்யப்படுவதினால் இலங்கையின் பொருளாதாரத்திற்கு கிடைக்கும் பயன்கள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (5புள்ளி )

08. 1. இலங்கையில் காணப்படும் இயற்கை கனியங்கள் நான்கு தருக. (2 புள்ளி)

2. இலங்கையில் நிலம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களுக்கு உதாரணம் மூன்று தருக. (3 புள்ளி )

3. இலங்கையில் நிலப்பயன்பாட்டின்போது ஏற்படும் பிரச்சினைகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. ( 5 புள்ளி